பள்ளிக்கல்வி ஆணையர் மற்றும் தொடக்கக் கல்வி இயக்குநரின் இணை

செயல்முறைகள்

ந.க.எண். 043443/பிடி1/இ2/2022 நாள் 28.12.2022

பொருள் பள்ளிக்கல்வி - அனைத்து வகை அரசு/அரசு நிதியுதவி பெறும் பள்ளிகளில் பணிபுரியும் தலைமை ஆசிரியர்கள், ஆசிரியர்கள் மற்றும் ஆசிரியரல்லாத பணியாளர்களின் பணிப்பதிவேடு (SR) - ஈட்டிய விடுப்பு, மருத்துவச் சான்றின் பேரில் ஈட்டா விடுப்பு மற்றும் இதர பதிவுகள் நாளது தேதிவரை மேற்கொள்ளப் பட்டுள்ளதை உறுதி செய்தல் - அறிவுரைகள் வழங்குதல் - தொடர்பாக

தமிழ்நாட்டில் உள்ள அரசு/அரசு நிதியுதவி பெறும் தொடக்க/நடுநிலை/உயர்நிலை/மேல்நிலைப் பள்ளிகளில் பணிபுரியும் தலைமை ஆசிரியர்கள், ஆசிரியர்கள் மற்றும் ஆசிரியல்லாத பணியாளர்களது பணிப்பதிவேடுகளில் ஈட்டிய விடுப்பு, மருத்துவச் சான்றின் பேரில் ஈட்டா விடுப்பு மற்றும் இதர பதிவுகள் நாளது தேதிவரை மேற்கொள்ளப்பட்டுள்ளதை உறுதி செய்திட வழங்கப்படுகின்றன.

1. 06.01.2023 வரை விருப்பம் உள்ள ஆசிரியர்கள்/தலைமை ஆசிரியர்கள் சம்பந்தப்பட்ட பள்ளிகள்/அலுவலகங்களுக்குச் சென்று பணிப்பதிவேட்டிலுள்ள பதிவுகளை சரிபார்த்துக்கொள்ளலாம். மேலும் 07.01.2023 அன்று அனைவரும் தங்களது பணிப்பதிவேடுகளில் உள்ள பதிவுகளை சரிபார்த்துக் கொள்ள சிறப்பு முகாம் சம்பந்தப்பட்ட அலுவலகங்களில் நடைபெறும்.
2. அரசு நிதியுதவி பெறும் தொடக்க/நடுநிலை/உயர்நிலை/மேல்நிலைப்பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்கள் மற்றும் ஆசிரியரல்லாதோரின் பணிப்பதிவேடுகள் சார்ந்த பள்ளிச் செயலர்களால் பராமரிக்கப்பட்டு மாவட்டக் கல்வி அலுவலரது ஒப்பளிப்பு பெறப்படுவதால், சார்ந்த விருப்பம் உள்ள ஆசிரியர்கள் மேற்குறிப்பிட்ட நாட்களில் இதனை சம்பந்தப்பட்ட பள்ளிச் செயலர்கள்/அலுவலகங்களில் சரிபார்த்துக் கொள்ளலாம்.

இப்பணி வரும் 7.1.2023 அன்றே முடிக்கப்பட வேண்டும் என்பதால் சம்பந்தப்பட்ட தலைமை ஆசிரியர்கள்/வட்டாரக் கல்வி அலுவலர்கள்/ மாவட்டக் கல்வி அலுவலர்களுக்கு அறிவுறுத்துமாறு அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

28.12.22

தொடக்கக் கல்வி இயக்குநர் | ஆணையர், பள்ளிக்கல்வி

பெறுநர்

அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள்

அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள் (இடைநிலை), (தொடக்கக் கல்வி)

ந.க.எண். 4937/அ1/2022 நாள். .12.2022

தகவலுக்காகவும் உரிய நடவடிக்கைக்காகவும் அனுப்பப்படுகிறது

பெறுநர்

அனைத்து வகை தலைமை ஆசிரியர்கள்

முதன்மைக் கல்வி அலுவலர்